Appenzell Ausserrhoden

## நீங்கள் புதிதாக Appenzell Ausserrhoden மாநிலத்தில் குடியேறியுள்ளீர்கள்.
## நாங்கள் உங்களை இதயபூர்வமாக வரவேற்கின்றோம் !

---



உங்களை நாங்கள் Appenzell Ausserrhoden மாநிலத்தில் அன்புடன் வரவேற்கின்றோம். **முதலாவது தகவல் கலந்துரையாடலில்** உங்களுக்கு நாங்கள் வாழ்க்கை நிலைமைகள், உங்கள் **உரிமைகள் மற்றும் கடமைகள்** மற்றும் வெளிநாட்டுப் பெண்கள் மற்றும் ஆண்களுக்கான வசதிவாய்ப்புகள் குறித்து அறியத்தருவோம்.
இந்தத் தகவல்கள், உங்கள் புதிய சூழல் மற்றும் உங்கள் புதிய மாநிலம் குறித்துத் தெளிவாக அறிந்துகொள்ள உங்களுக்கு உதவும்.

இதைத்தவிர உங்களது **தனிப்பட்ட தகவல்பெறும் தேவைகளான** கல்வி ஒழுங்கமைப்பு, சுகாதாரக்கட்டமைப்பு, காப்புறுதிப்பாதுகாப்பு, தொழில் மற்றும் வரிகள், மொழிவகுப்பு போன்றவை குறித்து நாங்கள் கலந்துரையாடுவோம். கல்வி ஒழுங்கமைப்பு எவ்வாறு உள்ளது? தொழில் உலகு எவ்வாறு இயங்குகின்றது அல்லது நீங்கள் எவ்வாறு ஒரு தொழிலைத் தேடிக்கொள்ளலாம்? ஒரு மருத்துவக்காப்புறுதி என்றால் என்ன? எந்தக் காப்புறுதிகளை நீங்கள் செய்துகொள்ள வேண்டும்? வரிகள் என்றால் என்ன? நீங்கள் எங்கு டொச் கற்கலாம்? போன்றவை குறித்து நாங்கள் உங்களுக்குப் பொருத்தமான வாய்ப்புகளை அறியத்தருவோம்.

---




பதிவு செய்யும் நடவடிக்கையின்போது, குடியிருப்பாளர்களைக் கண்காணிக்கும் திணைக்களம் (Einwohnerkontrollen) உங்களுடன் **முதலாவது தகவல் கலந்துரையாடலுக்கான ஒரு தவணையைத்** தீர்மானிப்பார்கள். இக் கலந்துரையாடல் ஒரு மணித்தியாலம் இடம்பெறுவதுடன் இது Herisau இலுள்ள ஒத்துழைத்து முன்னேற்றும் தகவல் நிலையத்தால் (INFI) செயற்படுத்தப்படும் (முகவரியை பின்பக்கத்தில் காணலாம்).

போதியளவு டொச் தெரியாதிருந்தால், INFI ஒரு மொழிபெயர்ப்பாளரை ஏற்பாடு செய்யும், அவர் உங்கள் பாஷையில் மொழிபெயர்ப்பார். இது உங்களுக்கு இலவசமானதாகும்.

தற்சமயம் நீங்கள் தீர்மானித்த தவணையை தள்ளிப்போடுவதற்கான கட்டாயம் இருந்தால், தயவுசெய்து நேரகாலத்துடன் எமக்கு அறியத்தாருங்கள், இதன்மூலம் மொழிபெயர்ப்பாளரை அழைப்பதை நேரகாலத்துடன் இரத்துச்செய்ய முடியும். இதனால் தேவையற்ற செலவைத் தவிர்த்துக் கொள்ளலாம். **மொழிபெயர்பாளர் <u>இல்லாத</u> தவணைக்கு ஆகக் குறைந்தது 24 மணித்தியாலங்கள் முன்பாகவும், மொழிபெயர்ப்பாளர் <u>உடனான</u> தவணைக்கு ஆகக் குறைந்தது 48 மணித்தியாலங்கள் முன்பாகவும் வரமுடியாததை அறிவிக்க வேண்டும் (தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலமாக – 071 353 64 61/ infi@ar.ch).**

---




முதலாவது தகவல் கலந்துரையாடலுக்கான தவணை ஒருதடவை என்பதுடன் இது பதிவு செய்யும் நடவடிக்கையுடன் சேர்ந்ததாகும். தற்சமயம் நீங்கள் வேலை செய்பவராக இருந்தால், தயவுசெய்து தீர்மானிக்கப்பட்ட இத்தவணை குறித்து உங்கள் தொழில் வழங்குனருக்கு அறிவித்துக் கொள்ளுங்கள். வரத்தவறிய/ மன்னிப்புக்கோராது வராமலிருந்த தவணை குறித்து நிச்சயமாக உங்கள் வேலைதலம் ஊடாக உங்களை INFI தொடர்புகொள்ளும்.

---



கலந்துரையாடலுக்குப் பின்பும் ஒத்துழைத்து முன்னேற்றும் தகவல் நிலையம் (INFI) உங்கள் தொடர்பு நிலையமாக இருப்பதுடன், உங்களது கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் தயாராக உள்ளது. அத்துடன் எமது இணையத்தளத்தில் அதிகளவில் உதவக்கூடிய தகவல்களை நீங்கள் காணலாம், www.leben-in-ar.ch